# பாரதிதாசன் பல்கலைக்கழகம்

(தேசிய மதிப்பீட்டுத் தரநிர்ணயக் குழுவின் "A" தரச்சான்றிதழ் இரண்டாம் சுற்றில் பெற்றது)
பல்கலைப் பேரூர், திருச்சிராப்பள்ளி – 620 024.


அலுவலகம் : 0431-2407016,2407060
தொலைப்படி : 0431-2407444
மின் அஞ்சல் : coe@bdu.ac.in
வலைத்தளம் : www.bdu.ac.in

முனைவர் க. துரையரசன், எம்.ஏ.,எம்.எட்., எம்.ஃ.பில்.,பிஎச்.டி.
தேர்வு நெறியாளர்


---

ந.க.எண்.005தே.நெ.அ/ம.பி-2/ நவம்பர் 2018 நாள்: 07-08-2018

பெறுநர்
கல்லூரி முதல்வர் அவர்கள்
பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவு பெற்ற
அனைத்துக் கல்லூரிகள்

அன்புடையீர்,

பொருள்: நவம்பர் 2018 – சிறப்புப் பாடங்கள் - தேர்வு விடைத்தாள் திருத்தும் பணி – ஆசிரியர்கள் பெயர் பட்டியல் கோருதல் - சார்பு

------

நவம்பர் 2018 பருவத்திற்கு சிறப்புப் பாடங்களைக் கற்பிக்கும் ஆசிரியர்களின் பெயர்களைப் பல்கலைக்கழக இணையதளத்தில் http://www.bdu.ac.in/ugved.php என்கிற இணைப்பில் இருந்து பதிவிறக்கம் செய்து, பூர்த்தி செய்து **20.08.2018**–க்குள் அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

## Details of Special Papers

| Subject code | Subject |
|---|---|
| 18UGVED | Value Education |
| RUGSDC | Soft Skill Development |

படிவங்களைப் பூர்த்தி செய்யும் முன் கீழ்க்காணும் விவரங்களின் மீது தனிக் கவனம் செலுத்தும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது:

1. சிறப்புப் பாடங்களைக் கற்பிக்கும் ஆசிரியர்களின் பெயர்களை மட்டும் அவர்களின் பணிமூப்பு (Seniority) அடிப்படையில் பட்டியலிடவும். பல்கலைக்கழகத் தேர்வாளர் பட்டியலில் இல்லாத ஆசிரியர்களின் பெயர்களைக் கண்டிப்பாகப் பரிந்துரைக்க வேண்டாம்.
2. மாற்றுப் படிவங்களை உபயோகிக்க வேண்டாம்.
3. ஆசிரியர்களின் எண்ணிக்கை (அனைத்து துறைகளையும் சேர்த்து) **இருபதுக்கு (20)** மிகாமல் இருக்க வேண்டும்.
4. பல்கலைக்கழக இணையதளத்திலிருந்து **http://www.bdu.ac.in/ugved.php பதிவிறக்கம் செய்யப்பட்ட MS Excel format-ல்** பூர்த்தி செய்து **confidential2@bdu.ac.in என்கின்ற மின் அஞ்சல் முகவரிக்கு 20-08-2018 – க்குள் அனுப்பி வைக்கவும். பதிவிறக்கம் செய்யப்படாத MS Excel format-ல் பெறப்படும் Soft Copy – ஐ ஏற்றுக்கொள்ள இயலாது.** மேலும் மின்னஞ்சலுக்கு அனுப்பும் படிவத்தின் நகல் ஒன்றினைக் கல்லூரி முதல்வரின் கையொப்பம் இட்டு, அஞ்சல் வழியாகத் தேர்வு நெறியாளர் அலுவலகத்திற்கு **20.08.2018**-க்குள் அனுப்பி வைக்கவும்.

நவம்பர் 2018 தேர்வு முடிவுகளை விரைவாக அறிவிக்க ஏதுவாகத் தங்களது ஒத்துழைப்பினை நல்கி இக்கடிதத்தின் மீது தனிக்கவனம் செலுத்தி விரைந்து செயல்படுமாறு அனைத்துக் கல்லூரி முதல்வர்களும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். பெயர் பட்டியல் அனுப்பி வைக்காத கல்லூரியில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு மேற்படி விடைத்தாட்கள் திருத்தும் பணிக்கான நியமன ஆணை அனுப்ப இயலாது என்பதனையும் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

**தேர்வு நெறியாளர்**